<u>**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**</u>
<u>**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**</u>
<u>**MCOP .No. 440/2017**</u>

<u>**நாள்**</u> **: 10.06.2025**

**எ.ம.சா.** 2 (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பன்னீர்செல்வம் | மாவட்டம் | : | |
| தந்தை பெயர் | : | திரு. காளியப்பன் | வயது | : | |
| ஊர் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | தேசியம் | : | |

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணி புரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்க பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மாக்கனூர் கிராமம், வேடியப்பன் கோவில் வட்டம், 2/171 முகவரியை சேர்ந்த மாணிக்கம் மகன் அன்பழகன் என்பவருக்கு 24.04.2017 அன்று இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டிருந்ததா என்றால் அழைப்பாணையில் அன்பழகன் தந்தை பெயர் மனோகரன் என தெரிந்ததால் மனோகரன் மகன் அன்பழகன் என்பவர் தொடர்பாக கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டது.

**வேண்டுகோளின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/. V.L. சந்தோஷ்,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.